தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-6

ந.க.எண்.24909 / சி4 / இ2 / 2024 நாள். 08.07.2024

பொருள்: பள்ளிக் கல்வி - 2024-25 ம் ஆண்டு — மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (தொடக்கக்கல்வி) உதவித் திட்ட அலுவலர் பணியிடங்களில் (அரசு மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிநிலையில்) பணிபுரியும் 59 உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட திட்ட அலுவலகத்தில் (பட்டதாரி ஆசிரியர் பணிநிலையில்) கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களில் பணிபுரியும் 67 ஆசிரியர்களை தாய்துறைக்கு திரும்ப அனுப்புதல் – சார்பு.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.100 பள்ளிக் கல்வி (SSA2) துறை நாள்.16.5.2018
2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை.6 அவர்களின் கடிதம் நக.எண்.1431 / ஆ3 / BRCCRC / ஒபக / 2024 நாள்.29.4.2024
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.24909 / சி4 / இ2 / 2024 நாள். 15 .05.2024
4. அரசாணை (நிலை) எண்.156, பள்ளிக் கல்வி (SSA2) துறை நாள்.03.07.2024.

பார்வை-4ல் காண் அரசாணையின்படி மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலங்களில் (அரசு மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணிநிலையில்) பணிபுரியும் 59 உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்டத் திட்ட அலுவலகங்களில் (பட்டதாரி ஆசிரியர் பணிநிலையில்) பணிபுரிந்து வரும் 67 கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பளர்களை அரசு மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்களாக அவர்கள் தாய் துறைக்கு அனுப்பி வைக்க ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மாவட்ட கல்வி அலுவலகத்தில் (தொடக்கக் கல்வி)யில் பணிபுரியும் 59 உதவித் திட்ட அலுவலர்களையும்,மாவட்டத் திட்ட அலுவலகங்களில் பணிபுரியும், 67 கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களையும் அந்தந்த மாவட்டத்தில் அரசு மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்களாக மாறுதல் வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

08/07/24

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் மூலமாக)